**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**M.C.OP.No.72/2024- PW-2**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.எம்.ராஜூ | District | இராணிப்பேட்டை |
| Father Name | திரு.முனுசாமி | Occupation | தனியார் நிறுவனத்தில் வேலை |
| Village /Area | சோளிங்கர் | Age | 56 |
| Taluk | சோளிங்கர் | Aadhar Card No. | 4965 6224 4820 |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 11.11.2025.

**முதல் விசாரணை:**

நான் இந்த மனுவில் மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். நான் இன்று தாக்கல் செய்யும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துகள் என்னுடைய கையெழுத்துகள் தான். அந்த நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் என்னால் என் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டுள்ளது. அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும்.

**2-ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-**

என்னுடைய சொந்த ஊர் சோளிங்கர் தாலுக்காவிலுள்ள கொண்டபாளையம் கிராமம் ஆகும். விபத்தில் இறந்த கோபி என்பவரும் என் ஊரை சேர்ந்தவர். அவர் என் உறவினர் இல்லை. விபத்து 30.11.2023-ம் தேதி மதியம் 2.00 மணி முதல் 3.00 மணிக்குள் நடந்தது. விபத்து நடந்த சாலை அகலமான சாலை. அந்த சாலையில் இருபுறமும் வாகனங்கள் செல்லும். அந்த சாலை நெடுஞ்சாலை ஆகும். விபத்து சர்வீஸ் சாலையில் நடந்தது. விபத்து நடந்தவுடன் இறந்த கோபியின் மனைவிக்கு தகவல் சொன்னேன். விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் நான் புகார் கொடுக்கவில்லை. விபத்து நடந்தவுடன் ஜான் என்பவர் தனக்கு தகவல் கொடுத்ததாக குமார் முதல் தகவல் அறிக்கையில் சொல்லியிருக்கிறார் என்றால் அவரும் சொல்லியிருக்கலாம். நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், விபத்தை பார்த்ததாக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. விபத்தில் இறந்த கோபி ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனம் எந்த நிறுவன தயாரிப்பு மற்றும் அதன் நிறம் என்னவென்று எனக்கு ஞாபகமில்லை. விபத்து நடந்த சாலையில் அருகில் பெட்ரோல் நிலையம் உள்ளது. அந்த பெட்ரோல் நிலையம் சாலைக்கு எந்த

திசையிலுள்ளது என்று எனக்கு சரியாக தெரியவில்லை. விபத்தில் இறந்த நபர் என் ஊரை சேர்ந்தவர் என்பதாலும், மனுதாரர்கள் எனக்கு வேண்டியவர்கள் என்பதாலும் விபத்தை பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>:–** இல்லை

BALAKRISHNAN

Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.